இணைப்புகள்.

இணைப்பு I.

[457-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 366-க்கான விடையைக் காண்க.]

(அ), (ஆ)—உயர் நீதிமன்றத்திற்குக் கீழ்ப்பட்ட சிவில், கிரிமினல் நீதி மன்றங்களில் 14—11—1976 முதல் தீர்ப்புகளையும், டிக்ரிகளையும், ஆணைகளையும் தமிழில்தான் எழுதவேண்டும் என்பதற்கு 1956 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஆட்சிமொழிச் சட்டத்தின் 4-பி பிரிவு வகை செய்கிறது. ஆணையில் குறிப்பிடப்படுகிற கால அளவுக்கும், சூழ்நிலைகளிலும் சிவில் அல்லது கிரிமினல் நீதி மன்றங்களின் தலைமை அதிகாரிகள் எவர்களேனும் தீர்ப்புகளையும், டிக்ரிகளையும், ஆணைகளையும் ஆங்கிலத்தில் எழுத அவர்களுக்கு அனுமதி வழங்க மேற்சொன்ன பிரிவின் வரம்பு நிபந்தனை உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. மேற் சொன்ன வரம்பு நிபந்தனையையொட்டி செஷன்ஸ் நீதிபதிகள் தீர்ப்புகளைத் தமிழில் எழுதுவது கடினமென்று அறிந்தால், அவர்கள் 2—11—1977 வரை அவற்றை ஆங்கிலத்திலும் எழுத உயர் நீதிமன்றம் இடைக்கால ஏற்பாடாக அனுமதித்தது. தாய் மொழி தமிழாக இல்லாத, அல்லது தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெறாத, கிரிமினல் நீதிமன்ற நீதிபதிகள் அனைவரும் தீர்ப்புகளையும், ஆணைகளையும் 19—11—1977 வரை ஆங்கிலத்தில் எழுத உயர்நீதி மன்றம் அனுமதி அளித்தது, தங்கள் நீதி மன்றங்களில் தமிழ்த் தட்டச்சிலும், சுருக்கெழுத்திலும் போதுமான தகுதி பெற்ற தட்டச்சர்-சுருக்கெழுத்தர்கள்/தட்டச்சர்கள் இல்லை என்ற காரணத்திற்காகவும், மாஜிஸ்ட்டிரேட்டுகள் சிலருக்குத் தமிழில் நன்கு எழுதப் படிக்கத் தெரியாததாலும் அவர்கள் கேட்டுக் கொண்ட கால அளவிற்கு தீர்ப்புகளையும் ஆணைகளையும் ஆங்கிலத்தில் எழுதவும் உயர்நீதி மன்றம் அனுமதி அளித்தது. நீதிபதிகள் தீர்ப்புகளையும் ஆணைகளையும் தமிழில் எழுதுவதற்கு அனுமதிக்கப்பட்ட கால அளவு ஏற்கெனவே முடிவடைந்துவிட்டது. இதனையடுத்து, தீர்ப்புகளையும் ஆணைகளையும் தமிழில் எழுதுவதிலிருந்து தங்களுக்கு விலக்கு அளிக்குமாறு ஒரு சில நீதிபதிகளே உயர்நீதி மன்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். அவர்களுடைய வேண்டுகோள் உயர்நீதி மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. மற்ற அதிகாரிகளிடமிருந்து குறிப்பிட்ட வேண்டுகோள் வராததால், அவர்கள் தீர்ப்புகளையும் ஆணைகளையும் தமிழில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்று தான் அனுமானிக்க வேண்டி உள்ளது. மேற் சொன்னவற்றால், நீதி மன்றங்களில் தீர்ப்புகளையும் ஆணைகளையும் தமிழில் எழுதுவது, தமிழ்த் தட்டச்சர்களும், சுருக்கெழுத்தர்களும் போதிய அளவில் கிடைக்காத காரணத்தினாலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று சொல்வது முற்றிலும் சரியல்ல. ஆயினும், தற்போதுள்ள ஆங்கில தட்டச்சர்களும், சுருக்கெழுத்தர்களும் குறிப்

பிட்ட கால அளவுக்குள் தமிழ்த் தட்டச்சினையும், சுருக்கெழுத்தையும் கற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சுருக்கெழுத்தர்-தட்டச்சர்கள் தமிழ் சுருக்கெழுத்தில் உயர்நிலைத் தேர்வில் தேறியிருந்தால் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாய் சிறப்புச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்வில் அவர்கள் தேர்ச்சி பெறுவிட்டால், ஊதிய உயர்வும், பதவி உயர்வும் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

இணைப்பு II.

[483ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 279-க்கான விடையைக் காண்க.]

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (சிப்காட்) 68 தொழிற் பிரிவுகளுக்கு தவணைக் கடன் வாயிலாக நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. அதில் 41 தொழில் பிரிவுகள் உற்பத்தி தொடங்கி விட்டன. 41 தொழிற் பிரிவுகளில் 14 தொழிற் பிரிவுகள் இலாபத்துடன் இயங்கி வருகின்றன. 27 தொழிற் பிரிவுகள் இழப்பு அடைந்து இருக்கின்றன.

இலாபத்துடன் இயங்கி வரும் தொழிற் பிரிவுகள் :—

1. மெட்ராஸ் மோட்டார் லிமிடெட் (பிரிவு-1), போர்ஜ், ஷாப், அனைக்கரப்பட்டி, இராமநாதபுரம் மாவட்டம்.

2. மெட்ராஸ் மோட்டார் லிமிடெட் பிரிவு 2 (டூல் ரூம் பிளாண்ட்), அனைக்கரைப்பட்டி, இராமநாதபுரம் மாவட்டம்.

3. ஸ்கேல்ஸ் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

4. மார்சல்ஸ் சன்ஸ் அண்டு கம்பெனி உற்பத்தி லிமிடெட், அம்பத்தூர், சென்னை.

5. மெட்ராஸ் சிமெண்ட் லிமிடெட், இராஜபாளையம், இராமநாதபுரம் மாவட்டம்.

6. அப்பலோ டியூப்ஸ் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

7. ஐ. ஏ. இ. சி. பாய்லர்ஸ் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

8. ஆரோ புட் பிரைவேட் லிமிடெட், அரோவல்லி, தென்னாற்காடு மாவட்டம்.

9. லார்டு கிருஷ்ணா ஆயில் அண்டு எக்ஸ்டிராக்சன் லிமிடெட், சிப்காட் தொழில் இணையகம், இராணிப்பேட்டை.

10. சவுத் ஈஸ்டு டேனிங் கம்பெனி லிமிடெட், ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்.